**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

ந.க.எண்.26622/வி2/இ2/2014, நாள் 20.5.2014

பொருள் இலவச மடிக்கணினி 2013–2014ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவ/மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குவது – +2 மதிப்பெண் சான்றிதழின் பின்புறம் பதிவு செய்வது – அறிவுரை வழங்குதல் சார்பு .

பார்வை 1. சென்னை–9 சிறப்பு திட்டங்கள் அமலாக்கப்பிரிவு, இயக்குநர் அவர்களின் நேரடி அறிவுரை.

---

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழகத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது.

2013–14ம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 12ம் வகுப்பு பயின்ற மாணவ/ மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குவது குறித்து அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 2013–14ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு முடித்த அனைத்து மாணவ/மாணவியருக்கும் அவர்களது பள்ளிகளில் 21.5.2014 அன்று மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு மதிப்பெண் சான்றிதழ் வழங்குவதற்கு முன்னர் எல்காட் நிறுவனத்திடம் இருந்து 2013–14ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு முடித்த அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி பெறப்பட்டிருந்தால் அவற்றை மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று பள்ளித்தலைமையாசிரியர் மூலம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

2013–14ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு முடித்த மாணவ/மாணவியர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்குவதற்கு முன்னர் மடிக்கணினி பெறப்படவில்லை

எனில் கடந்த ஆண்டு பின்பற்றப்பட்ட நடைமுறை போல் ரப்பர் முத்திரை தயார் செய்து அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 12ம் வகுப்பு முடித்த தகுதியுள்ள மாணவ மாணவிகளின் மதிப்பெண் சான்றிதழின் பின்புறம் மேல்பாதியில் வலதுபுறமாக ரப்பர் முத்திரையினை பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழ் வழங்க அனைத்து அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மதிப்பெண் சான்றிதழின் பின்புறம் பதிவு செய்யப்படவேண்டிய முத்திரையின் மாதிரி பின்வருமாறு

| |
|---|
| **Laptop to be issued**<br><br>**Headmaster** |
| **Laptop issued on-------------------------**<br><br>**Headmaster** |

**பள்ளிக் கல்வி இயக்குநர்**

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

1. **அரசு முதன்மைச் செயலர்**
   பள்ளிக் கல்வித் துறை
   சென்னை – 9. (அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

2. **அரசுச் செயலாளர்**
   சிறப்புத் திட்டங்கள் அமலாக்கப் பிரிவு,
   தலைமைச்செயலகம்,
   சென்னை – 9.( அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

3. **மேலாண்மை இயக்குநர்**
   எல்காட் நிறுவனம்,
   நந்தனம்,
   சென்னை – 15(அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)